1969 செப்டம்பர் 13]

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகர் அவர்களே, அரிசன ஆசிரியர்கள், பி.ஏ., பி.டி. படித்து முடித்தவர்கள், ஹெட்மாஸ்டர்களாகவும், அஸிஸ்டெண்ட்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயத்தில், திருமணம் ஆன ஆசிரியர்களுடைய மனைவிகள், ஆசிரியைகளாக அரிசன நல இலாகாவில் செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியைகளாக இருக்கிறார்கள். இரண்டு பேர்களும் இரண்டு வேறு டிபார்ட்மெண்டுகளில் இருப்பதால், குடும்பம் ஒற்றுமையாக இருக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஆசிரியைகளை அவர்களுடைய முன்னாள் சர்வீசோடு, ஜில்லா போர்டு, அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாற்ற மறுபரிசீலனை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரிசன ஆசிரியர், ஆசிரியைகள் தனித்தனித் துறைகளில் பணி புரிவதால் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவர்கள் ஒரே பள்ளியில், கணவன் மனைவியர், பணி புரிவதால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படுவதாகவும் புகார்கள் வருகின்றன. (சிரிப்பு). அரசினர் உயர்நிலைப்பள்ளி, மாவட்ட வாரியப் பள்ளி இவற்றில் உள்ளவர்களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது. அரிசன நலப் பள்ளிகளில் இருப்பவர்களை சர்வீசோடு எடுக்க விதி முறையில்லை. எதிர் காலத்தில் அது கவனிக்கப் படலாம். இப்பொழுது அரசினர் உயர் நிலைப் பள்ளி, வாரியப் பள்ளிகளை இணைக்கும் முயற்சி முடிந்த பிறகு, அதை அரசு கவனிக்கும்.

செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி

*270 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சிக்கு எஸ்.எஸ்.எல்.சி-யில் தவறிய அரிசன மாணவ மாணவியர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்களா ?

(இ) அதே போல் பெண்களுக்கும் சலுகை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அரிசனங்கள், பழங்குடி மக்கள் ஆகியவர்களிலே, விதிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு மதிப்பெண்கள் பெற்றுள்ளவர்கள், அவர்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 16 சதவீத இடங்களை நிரப்பக் கூடிய வகையில் போதிய எண்ணிக்கையில் கிடைக்காவிட்டால், பொருத்தமான விதியைத் தளர்த்துவதற்குப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரமுண்டு.

(இ) இவ்வாறு விதியினின்றும் விலக்களிக்கும் சலுகை அரிசனங்களல்லாத பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென உறுப்பினர் விரும்புகின்றார். இல்லை என்பதே இதற்கு விடையாகும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரிசனங்களல்லாத பெண்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் தவறி, செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களை நடைமுறையில் எடுப்பது கிடையாது. 'பின்தங்கியிருக்கக்கூடிய இனத்'தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில், அந்தப் பெண்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் தவறியிருந்தாலும் அவர்களை ஆசிரியர் பயிற்சிக்கு எடுத்துக்கொள்வதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு விண்ணப்பங்கள் வராதிருந்த நிலைமை சில பல ஆண்டுகளுக்கு முன்னல் இருந்திருக்கலாம். இப்போது 250 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியவர்களும் இருக்கிறார்கள். அரிசனங்களைப் பொறுத்த வரையில் 16 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அரிசனப் பெண்களிலும் கூட 350 மதிப்பெண்களுக்கு மேல் வாங்கக்கூடிய பெண்கள் இருக்கிறார்கள். ஆகவே, விதிகளைத் தளர்த்தி குறைந்த எண்ணிக்கையுடையவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. மேலும், குறிப்பிட்ட அளவிற்கு மாணவர்கள் யாரும் சேராமல் இருந்தால், அப்போது குறைந்த மதிப்பெண்களையுடையவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். உறுப்பினர் அவர்கள் கூறுகிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 350, 400 என்று மதிப்பெண்கள் வாங்கியவர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் விதிகளைத் தளர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர்களின் வைப்பு நிதி

*** 271 வின.—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

ஆசிரியரின் வைப்பு நிதித் தொகையில் (P. F.) அரசின் பங்கு எந்த அளவில் எவ்வாறு இணைக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர் வருங்கால வைப்புநிதிக்கு தொகை செலுத்துபவர், அவருடைய சம்பளத்தின் 6 சதவீதத்தைச் செலுத்த வேண்டும். பள்ளி நிர்வாகிகள் 3 சதவீதமும் அரசு 3 சதவீதமும் உதவித்தொகை வழங்கும். பள்ளி நிர்வாகிகளின் பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டுள்ளதால் 6 சதவீத உதவித் தொகையையும் அரசு வழங்கும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறைப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு நிர்வாகத்தினர் கொடுத்துவரும் 3 விழுக்காடு தொகையினையும் அரசினரே ஏற்றுக்கொள்ள முன்வந்தால் நலமாக இருக்கும். அப்படி அரசினரே ஏற்றுக்கொள்ள முன் வருவார்களா ?